தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 11, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜுலை 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணின்யென்ப நாட்டிற்கிவ் வைந்து."

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண் 1,* திருமதி *செ.* சுந்தராம்பாள், *மாண்புமிகு* பொதுப் பணி, மதுவிலக்கு *&ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

1—

சார் பதிவாளர் அலுவலகம்

***9864—திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜுலை 26

மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் சார் பதிவாளர் அலுவலகம் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் செயல்பட்டு வருவதை திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது சாத்தியம் இல்லை.

திருமதி செ. சுந்தராம்பாள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் 20—7—1984 ஆம் ஆண்டு இந்த அலுவலகம் தொடங்கப்பட்டு மிக நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. வருடத்திற்கு 1500—க்கு மேற்பட்ட பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறு இல்லையென்று கூறி இருக்கின்றார்கள். மறுபரிசீலனை செய்து வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் முகாம் சார் பதிவகம் சேலம் (மேற்கு) பதிவு மாவட்ட மேட்டூர் சார் பதிவகத்துடன் சார்ந்தது. இச்சார் பதிவகம் வாடகைக் கட்டடத்தில் மாத வாடகையாக ரூ.300 அளிக்கப்பட்டு இயங்குகிறது. இவ்வலுவலகத்திலிருந்து மேட்டூர் சார் பதிவாளர் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் சென்று பதிவு நடவடிக்கைகளைக் கவனிக்கின்றார். இந்த அலுவலகத்தில் ஆண்டொன்றுக்குத் தோராயமாக 700 ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு நாளைக்கு சராசரியாக 2 ஆவணங்கள் என்ற அளவில்தான் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு சார் பதிவகம் நடத்திட ஆண்டொன்றுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் செலவாகின்றது. பொதுவாக ஓர் அலுவலகம் துவங்க குறைந்தபட்சம் 2,500 ஆவணங்கள் பதிவு தேவை. எனவே, இங்கு முழுநேர அலுவலகம் துவங்க போதிய வாய்ப்பு இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சி. சிவசாமி.*

2004 ஜூலை 26]

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சார் பதிவாளர் அலுவலகங்களினுடைய எண்ணிக்கை தமிழகத்திலே இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்களினுடைய எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. அரசு சிக்கன நடவடிக்கையாக சார் பதிவாளர்களுடைய அலுவலக எண்ணிக்கையை நிலவரத்திற்கு ஏற்ப குறைக்க முன்வருமா என்றும் மேலும் சார் பதிவாளர் அலுவலகங்களில் பத்திரம் பதிவு செய்யப்படுகின்றபோது முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக நேரடியாகப் பணம் கட்டுகின்ற, பணம் கட்டிப் பதிவு செய்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பணத்தைச் செலுத்துவதற்கு சார் பதிவாளர் அலுவலகங்களில் வங்கியினுடைய கிளைகளைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 588 சார் பதிவகங்கள் இருக்கின்றன. குறிப்பாக அளவிற்கு அதிகமான சார் பதிவகங்கள் தமிழகத்தில் இருக்கின்ற நிலையை எண்ணி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு வட்டத்திற்கு ஒரு சார் பதிவகம் என்ற வீதமும், 10,000 ஆவணங்கள் பதிவுகளுக்கு மேல் இருக்கின்ற வட்டங்களுக்குக் கூடுதலாக ஒரு சார் பதிவகமும் இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்து அரசினுடைய ஆய்வில் இருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக வங்கிகளில்—ஏற்கெனவே வங்கிகள் மூலமாகவும் Treasury மூலமாகவும் பணத்தைச் செலுத்தி அல்லது நேரடியாகவே சார் பதிவகங்களில்-- பணத்தைச் செலுத்தி ஆவணங்களைப் பதிவு செய்வதற்கு ஏற்கெனவே வழிவகை உண்டு என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

***18682—திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—